
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 86

### ஆதியாகமத்தின் இடங்கள்-விடுகதையில்




Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. தன் மகன் பேரில் உலகின் முதல் கொலையாளி எழுப்பிய பட்டணம். (4)
2. தன் சகோதரர்களின் க்ஷேமம் விசாரிக்கக் கீழ்ப்படிந்து சென்றவன் அவர்களைக் கண்டுபிடித்த இடம். (4)
3. பிராணன் பிழைக்க கவிழ்த்துப் போடாதபடி, கேட்டுக் கொண்டபடி உதய நேரத்தில் லோத்து சேர்ந்த இடம் (3)
4. மோரியா தேசத்து மலையிலே மகனை பலியிட ஒப்புக் கொடுத்த ஸ்தலத்திற்கு ஆபிரகாம் இட்ட பெயர். (5)
5. ஆபிரகாம் ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்ட நிலத்திலிருந்த குகை. (4)
6. தேவனை முகமுகமாய்க் கண்டேன் உயிர்தப்பிப் பிழைத்தேன் என யாக்கோபு பெயரிட்ட ஸ்தலம் (4)
8. பஞ்ச நேரத்தில் ஆபிரகாம் தங்கும்படி சென்ற தேசம். (4)
13. பேலேகு காலத்தில் பகுக்கப்பட்டது எது? (2)

→→→

1. மிகக்குறுகிய பாவமில்லா காலம் அது ஆதி பெற்றோர் ஆண்டவரோடு உலா வந்த காலம் - அது எங்கே? (7)
10. நாடு நல்ல நாடு; யாக்கோபு குடும்பமாய் குடியிருக்க சுதந்திரம் பெற்ற நாடு - பெயர் என்ன? (4) கடைசி 2 எழுத்துக்கள் ↑
14. யாக்கோபு பலிபீடம் கட்டி தொழுத ஸ்தலம். எகிப்த்திற்கு குடும்பத்தோடு புறப்பட்ட ஸ்தலம் (5)

↑↑↑

7. சாலேம் என்னும் ....................... பட்டணம். (3)
8. சாராள் மரித்த ஊர். அதன் மறு பெயர் கீரியாத் அர்பா. அது எந்த ஊர்? (4)
9. ஓரியர் இருந்த மலை பின் ஏசா குடியேறிய ஏதோம் சீமை. (3)
11. பலத்த வேட்டைக்காரனும் பராக்ரமசாலியான நான் எழுப்பிய மிகப் பெரிய பட்டணம். (3)
12. ஆபிரகாமின் உத்தம ஊழியக்காரனாகிய எனது ஊர். (4)
14. எப்பிராத்தாவின் வேறு பெயர். (5)
16. நமக்கு பேர் உண்டாக நகரத்தையும் சிகரமுள்ள கோபுரத்தையும் எத்தேசத்தில் கட்ட எத்தனித்தனர் ஜனங்கள்? (4)

- தொடர்ச்சி 4-ம் பக்கம்

Private Circulation only    கரிகாலன், திருச்சி - 8. போன் : 2708110

SSA

# ஆரோனின் துளிர்த்த கோல்

## வேதம் அறிவோம், தேவர்களாவோம்

THE SPROUTED STAFF OF AARON

மாத இதழ் : அக்டோபர் 2019

### ஆதியாகமம் 39:9 ஆ

**யோசேப்பு :** "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?"

★★★★★

## JOHN 12:24

Sun, why do you set?
If I do not set, you cannot see the stars,
the shining clouds and the moon.

Flower, why do you whither?
If I do not whither and fall down,
you cannot have fruits.

Egg, why do you burst out?
If I do not do that,
the small bird will not come out.

Salt, why do you disappear in the food?
If I do not disappear,
the food wil not be tasty.

Body, why do you stop functioning one day?
If I do not die, your inner body cannot reach the stage,
that your Saviour has prepared for you.

Lord,mould me so that I may yield lot of grains like the grains of the wheat. Amen.

**Rt. Rev. Gnanabaranam Johnson**

**அன்புடையீர், வணக்கம்.**

## ஆர்ப்பரிப்போம் - ஆனந்தமாய், ஆவியோடு

பழைய பாரம்பரிய பாடல்களையே பல்லாண்டுகளாக பாடிக் கொண்டிருக்-கிறது திருசபை. கருத்தை கவனத்தில் கொண்டு உணர்ந்து பாடுவதில்லையே என்று பொறுமிக்கொண்டிருந்தேன் மனதளவில். உன்னதரை உதடுகள் மட்டுமே துதிக்கிறதோ, உள்ளம் இசையில் இசைந்து இணையவில்லையோ? என்ற எண்ணம் என் ஆழத்தில் ஏக்கம் அலையாய் அடித்துக் கொண்டிருந்தது.

அன்று ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில், ”எண்ணியெண்ணி துதி செய்வாய்” என்ற பாடலை பாடிக்கொண்டிருந்தனர். தெரிந்த பாடல் தானே என்ற மனப்போக்குடன் ஆரம்பித்த எனக்கு, திடீரென ”நீரினில் வாழ்கின்ற யாவும்”, என்ற வரிகளை பாடியபோது என் மெய் சிலிர்த்தது, என் உள்ளத்தில் ஒரு இனம்புரியாத மகிழ்ச்சி நீரோடையைப்போல பாய்ந்து பரவசப்படுத்தியது, ஆனந்தக்கடலில் மூழ்கி ஆர்ப்பரித்து அகமகிழ்ந்து கூத்தாடியதை நான் மட்டுமே அறிவேன். காரணம் அன்று அப்பாடலிலுள்ள அர்த்தத்தை அணு அணுவாய் அனுபவித்துப் பாடினேன்.

பனிப்பிரதேச பாலைவனங்களில் வாழும் பென்குவின் பறவைகள் பல மையில்கள் உணவைத்தேடிக் கூட்டமாக அலைந்துதிரியுமாம். முட்டையிட்டு அதை இரண்டு கால்களுக்கிடையே அனலூட்டி நகர்த்திச் செல்கின்றன. பயணத்தில் பற்பல மேடும் பள்ளங்களும் உண்டு. பனிப்புயலை பார்க்கவே பயங்கரமாக இருக்கும். தனக்கு உணவு இருக்கிறதோ இல்லையோ பெற்றோர் முட்டை மீதுள்ள கவனத்தை தப்பவிடுவதில்லை. பென்குவின் குஞ்சு பொரித்து நடமாடும் நிலையில் பாதுகாப்பும் பராமரிப்பும் பன்மடங்கு வலுக்கிறது. ஒருக்கணம் பரமபிதாவின் அன்பும், அரவணைப்பும், ஆதரவும் என் மனக்கண்முன் நிழலிட்டது. ஓர் ஐந்தறிவு பறவைக்குள் இத்தகைய பாசத்தையும், பாதுகாக்கும் பண்பையும், பராமரிக்கும் குணத்தையும், போஷிக்கும் அறிவையும் வைத்தவர் தமது பிள்ளைகள் மீது அவருக்கு இருக்கும் அக்கறையை அளவிடமுடியுமோ?

தகப்பனைப்போல ஓங்கிய புயத்துடனும், தாயைப்போல ஆற்றித்தேற்றும் அன்பராய் நம்மோடுகூட நடந்து வருகின்ற வரும், நித்தியத்திலும் நம்மை நடத்தப்போகிற அந்த அநாதி சிநேகத்தை ஆயிரம் நாவுகள் இருந்தாலும் சொல்லிமுடியாது (உபா. 1:31, ஏசா. 66:13, எரே. 31:3). நீடிய தயவு, சாந்தம், இரக்கம், மன்னிப்பு என்ற அவருடைய ஈடுயிணையற்ற உயர் பண்புகளுக்காய் பண்கள் பல பாடுவோம் (சங். 103:8).

அந்த நீளம், அகலம், ஆழம், உயரமென்பதை அலகால் அளக்க முடியாத அன்பை ஆலயத்தில் ஆராய்ந்து எண்ணியெண்ணி துதித்தேன் (எபே. 3:18,19). அந்த பழையப்பாடல் அன்று என் கண்ணோட்டத்தில் புதிய பொலிவு பெற்றது. நான் அதை உற்சாகமாய்ப் பாடினேன். கர்த்தர் நமக்கு நன்மை செய்தபடியால் கருத்துடன் அவரைப் பாடுவோம் (சங். 13:6).

கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள், அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார். (எரே. 20:13) பவுல் அடிகளாரும், ”நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்” என்கிறார் (1 கொரி. 14: 15). துதிகளின் மத்தியில் வாசம்செய்யும் தேவனைத் ஆராதிக்கும் போது அவரை அறிகிற அறிவோடு பாடல்களை பாட தேவனே நமக்கு கிருபை செய்வாராக. ஆவியோடு ஆனந்தமாய் அவனியிலும், நித்தியத்திலும் ஆர்ப்பரிப்போம். ஆமென்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



## கடந்த மாத வேதவினா போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. பிரியா ஜெனிட்டா, 2. ஷரன் ரூத், 3. சாரா லின்சி கோல்டு, 4. ஹெப்சி பானுமதி

**II.** 1. வர்ஜீனியா, 2. மல்லிகா ஸ்டாலின் **I & II.** 1. P.D.கமலம், 2. வெனிட்டா ஆரோன்

**I & III.** 1. ஜெயசீலி ஜெயராஜ், எசேக்கியேல்

**II & III.** 1. தேவதாஸ் செல்வக்குமார், 2. S. தனபாக்கியம், 3. சாந்தி குணா, 4. G.T. ஜூலி, 5. வைல்ட் சாமிக்கண்ணு, 6. T. சுகந்தா, 7. ரோப்பா கிறிஸ்டல், 8. J. ஏஞ்சலினா, 9. சுகந்தி ஜோன்ஸ், 10. லேயாள் மார்க்கு, 11. செல்வமணி, 12. அன்னமேரி ராஜ், 13. தனராஜ், 14. பியூலா ஜெயப்பிரகாஷ், 15. ஜோன்பொன்முடி, 16. ரேவதி ஜெயசிங், 17. லிடியா ஜெயசீலன், 18. H. சிநேகா, 19. பிரேமலதா, 20. ஜாய்ஸ் மணிமொழி, 21. சின்னம்மாள் மேரி, 22. ஜெபவதி ராயப்பன், 23. சுதந்திர தேவி, 24.ஏஜலின் சிந்தியா, 25. சுதா மனோகரன், 26. I. டெய்சி, 27. மாலா நெப்போலியன், 28. எஸ்தர் ராபின்சன்

**III.** 1. குணதிலகா யோனத்தான், 2. ஜெயசீலி செல்லையா, 3. பியூலா காந்தி, 4. ஹேமலதா ஜெயசந்தர், 5. சகுந்தலா தனராஜ், 6. பத்மாவதி, 7. எலிசபெத் ராணி, 8. சித்ரா பாபு, 9. லாவண்யா தேவி, 10. போதும் பொண்ணு, 11. சந்தான லக்ஷ்மி, 12. குளோரி, 13. Sis. ஜூலியட் சுபமங்களா, 14. Sis. நகோமி, 15. Sis. சலோமி, 16. சாந்தி செல்லையா, 17. சுபா வணக்கராஜ், 18. லிடியா ஞானவரம், 19. லூசி ஞானபாய், 20. கிரேசி பிரான்சிஸ், 21. டெய்சி

**I, II & III:** 1. சாந்தி வில்லியம், 2. ரூபி காட்பிரே டேவிட், 3. ருவல்யா அருள் பிரகாசம், 4. ஜூலியா சார்லி, 5. ரூபல்லா அற்புதராஜ், 6. மல்லிகா எட்வின், 7. ரேணி ரோசில்டா, 8. கீத்தா கிறிஸ்டோபர், 9. கலாவதி தயாளகரன், 10. கிரேஸ் பிராங்கிளின், 11. கிறிஸ்டபல் நிர்மலா, 12. சூசன் சுமித்ரா, 13. ஐவி கலாவதி, 14. விமலா ஆனந்த் தாஸ், 15. ரெஜினா மேரி மனோகரன், 16. பாக்கியராணி, 17. பாலின் மார்டீன், 18. பியூலா நவமணி, 19. ஒலிவியா லாங்டன், 20. மீரா பாண்டியன், 21. தேவகிருபா, 22. D. அன்புக்கமலம், 23. ஜெயசீலி ரவிச்சந்திரன், 24. சுகுணா எலிசபெத், 25. சந்திரா இம்மானுவேல், 26. எலிசபெத், 27. ஆனி கில்சன், 28. ஹெலன் சேசுராஜ், 29. ஜாஸ்மின் உஷாராணி, 30. ஆலிஸ் ஜோசியா, 31. நலந்தா டேவிட், 32. ரூபி அகஸ்டின், 33. நகோமி எடிசன்,34. ஜோசப் அதிசயம், 35. திலகவதி அதிசயம், 36. சலோமி எட்வின்,37. ஜெயசீலி பால்ராஜ், 38. ஷாலினி இம்மானுவேல், 39. செலைன் ராணி டேவிட், 40. ரபேக்கா ஐசக், 41. சாந்தி ஜோயல், 42. ராணி சாந்தகுமார், 43. ரோஸ்லின் திலகவதி, 44. ஜேனட் குணா, 45. ஜாகுலின் உஷா, 46. ஹெப்சி அசரியா, 47. பியூலா ஜேசுராஜன், 48. எஸ்தர் ஆலன், 49.சலோமி எட்வின், 50. கமலா ஜார்ஜ், 51. நான்சி தெபொராள், 52. இமல்டா சுந்தர்சிங்., 53. மெர்ஸி இன்பராஜ், 54. வித்யா வில்சன், 55. ஜீவாமிர்தம், 56. ஜீலா கிரேஸ், 57. J. மிராண்டா

**சென்னை பகுதியில் SSA - 19 வேதாகமப் போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

திருமதி. **எஸ்தர் ராபின்சன்**
**C/o. திரு. ஹேப்பிதுரை**
நெ. 15, 18வது நேரு காலனி, பழவந்தாங்கல், சென்னை – 600 114.
அலைபேசி எண் : **98840 90322**

# II. வேதாகமப் புதிர் - 32

**ஆதியாகமம் 46–50 அதிகாரங்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ளை | தை | பி | உ | ர் | யா | தி | த | ந் | ச |
| தி | க | ப் | ரா | லி | கு | ரி | க | ந் | வு |
| ம் | ரோ | னு | ரே | ப் | ம் | ள் | தி | நா | ல் |
| ன் | கி | அ | டி | யே | ன் | க் | வி | ஸ் | இ |
| ளை | ங் | டி | ட | ழ | க | ங் | மி | ஸ் | ல் |
| கே | பே | மை | உ | க் | யு | ர் | வா | பூ | ச |
| க | யு | க | ம் | ர | க | ம | மை | ப | ச் |
| ன் | ங் | ள் | சி | ங் | க் | ம் | ந் | ன் | ய் |
| பி | ல் | கா | ள் | க | ர் | ப | ப் | ய் | மே |

1. இவ்வேத பகுதியில் உள்ள 21 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 27 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் யாக்கோபு இறந்தபின் கலக்கமுற்ற தன் சகோதரர்களிடம் பயப்பட வேண்டாம் என ஆறுதல்படுத்தி பட்சமாய் பேசிய யோசேப்பின் வசனம் வெளிப்படும்.

## II. வேதாகமப் புதிர் - 31 விடை

**மகனே, தேவன் உனக்குக் கிருபை செய்யக் கடவர். ஆதி. 45:29**

## வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 85 விடைகள்

↓
1. இசக்கார் 49:14
2. யாபேத் 10:1
3. நாகோர் 20:20
5. யாக்கோபு 32:28
7. மெல்கிசேதேக்கு 14:18
10. சீகேம் 38:19
12. ஆஸ்நாத்து 41:45
17. ரூபன் 49:3,4

→
1. இஸ்மவேல், ஈசாக்கு
4. பில்காள் 30:3
7. மெத்தூசலா 5:27
9. காத் 30:10,11
13. சேம் 9:26
14. காயீன் 4:8
19. ஏனோக்கு 5:24

↑
8. பேலேகு 10:25
11. சேத் 4:25/லூக்.3:36
15. தாமார் 38:24–26
16. மனாசே 41:51
19. ஏசா 25:30–33
20. லாபான் 31:2–7
21. செபுலோன் 49:13
22. எப்பிராயீம் 48:17–19
23. சில்பாள் 30:12

←
6. லேயாள் 30:17–21
12. ஆசேர் 49:20
18. லோத்து 13:10,11
20. லாமேக்கு 4:18, 5:25





**ஆதியாகமம் 5ம் அதிகாரம் தொடர்கிறது.**

ஆதாமின் வம்ச வரலாற்றில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன.

1. இதில் சிருஷ்டிப்பு முதல் பெருவெள்ளம் வரை 10 தலைமுறையினர் இடம் பெறுகின்றனர்.

2. இடம்பெரும் மூதாதையர் கர்த்தர் பேரில் உள்ள விசுவாசம் மற்றும் நம்பிக்கை அடிப்படையில் தங்கள் குமாரர்களுக்கு பெயர் சூட்டினார்கள். உதாரணமாக மெத்தூசலா என்பதற்கு – அவன் மரிக்கும்போது வெள்ளம் வரும் என்று அர்த்தம்.

3. ஆதாம் பெருவெள்ளத்திற்கு முற்பட்ட காலத்தில் மிக அதிகபட்சமாக அதிக வருடம் வாழ்ந்தார். ஆதாமின் வயது 930. பழைய ஏற்பாட்டு நூல்களின் மொத்த அதிகாரங்கள் 929. 930-வது அதிகாரமாக புதிய ஏற்பாட்டில் மனுகுல மீட்பரான இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்வது நமக்கு வியப்பூட்டுகிறது.

4. “உயிரோட்டிருந்து மரித்தான்“ என்ற பதம் 8 முறை இவ்வதிகாரத்தில் உள்ளது. ஆனால் ஒரு மனிதன் : ஏனோக்கு – மரிக்கவில்லை; அவன் தேவனோடு சஞ்சரித்தார்; நடந்தார்; மரணத்தைக் காணாமல் எடுத்துக் கொள்ளப்பட்ட (எபி. 11:5) முதல் மனிதனானார். உலகில் வாழ்ந்த போது தேவனோடு சஞ்சரித்த காலத்தில் குடும்ப வாழ்க்கை நடத்தினார். 65-வது வயதில் தேவனோடு உறவு கொண்டு 300 ஆண்டுகள் அவரோடு நடைபயின்றார். ஆதாம் தேவஐக்கியத்திலிருந்து வீழ்ந்தான். தேவ உறவு முறிந்தது. ஏனோக்கு தேவனோடு கொண்ட உறவை மீட்டார். சபைக்கு முன் அடையாளமாகத் திகழும் ஏனோக்கு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்விற்கு உதாரணமாகின்றார். இவரைப்பற்றி ஆதி 5:18–21, 1 நாளா. 1:3, லூக். 3:37, எபி. 11:5, யூதா.14, 15 ஆகிய வேதபகுதிகளில் எழுதப்பட்டுள்ளது. மேலும் திருமறையின் வெளிப்பாட்டு இலக்கியத்தின் **(apocalyptic literature)** மூலம் ஏனோக்கு

1) மனந்திரும்புதலின் முதல் போதகராக,
2) வானம், பூமி பற்றிய இரகசியங்களின் ஆசிரியராக,
3) கடைசி கால நிகழ்வுகளுக்கு நபியாகவும் இருக்கிறார்.

இவ்விதம் ஏனோக்கு வேதத்தின் முதல் தீர்க்கதரிசியாகிறார்.

5. மெத்தூசலா மிக நீண்ட வயதுடையவராக வாழ்ந்தார். இது : மனந்திரும்பமாட்டார்களா என்ற மனிதர் பேரில் வைத்த தேவனுடைய எதிர்பார்ப்பு, அவருடைய நீடித்த ஏக்கம், அவருடைய நீடித்த பொறுமை ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.


6. ஆதாம் 7-ம் தலைமுறை ஏனோக்கோடு 306 வருடம் சேர்ந்து வாழ்ந்தார். மேலும் இவர் 9-ம் முறை லாமேக்கோடும் சேர்ந்து வாழ்ந்தார். மெத்தூசலா நோவாவோடு 600 வருடம் சேர்ந்து வாழ்ந்தார். நோவா ஆதாமுக்கு 10-ம் தலைமுறை ஆவார்.

எப்படி இத்தனை ஆண்டு காலம் இவர்கள் புவியில் வாழ்ந்தார்கள்? காரணம் : 1) மனுகுல மரபணு தூய்மையானதாய் இருந்தது. எனவே நோய், நொடியின் பாதிப்புகள் இல்லை. 2) மழை பெய்யவில்லை; மூடுபனி பூமியை நனைத்தது. ஆதி. 2: 5, 6 ஆகாய மண்டலம் நீர் தேக்கத்தால் நிறைந்திருந்தது. இயற்கையான **AC** போன்ற சூழல். எனவே உயிரினங்களை பாதிக்கும் கதிர்வீச்சு குறைவு. 3) அனைத்திற்கும் மேலாக தேவன் அவர்கள் பலுகி பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என ஆசியினால் உண்டான தேவ தயவு.

6-ம் அதிகாரத்தின் 2-ம் வசனம் தேவகுமாரர்கள் பற்றி கூறுகிறது. இவர்களைக் குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட இரு குழுவினர் இருக்கின்றனர். முதல் கருத்து : தேவதூதர்கள் இறைவனின் அனுமதியுடன் உலகை சீர்படுத்த புவிக்கு வந்ததாகவும், இங்கு மனித குமாரத்திகளை விரும்பி மணந்ததால் i) இராட்சதர்கள் போன்ற தோற்றமுடைய புதிய இனம் தோன்றியது. ii) புவிக்கு வந்த தூதர்களின் செய்கை இறைவனுக்கு ஏற்புடையதாயில்லாததால் அவர்கள் கீழே தள்ளப்பட்ட காவலிலுள்ள ஆவிகளானார்கள் (1பேது. 3:19) என்ற கருத்து நிலுவுகிறது. 2-வது கருத்து : தேவகுமாரர் போன்ற சேத்துடைய சந்ததியாரும் மனித குமாராயிருந்த காயீனுடைய சந்ததியரோடும் இணைந்தபோது தோன்றியவர்கள். இவ்விதம் அக்ரமம் பூமியிலே பெருகிற்று. மனித இதயத்து நினைவுகளன் தோற்றம் நித்தமும் பொல்லாததாயிற்று என்றும் கூறப்படுகிறது.

இச்சூழலில் i) மனிதனின் ஆயுசு நாட்களைக் குறைக்கவும் ii) புவியில் அனைத்தையும், நிக்கிரகம் பண்ணுவேன் எனவும் iii) நீதிமானும், உத்தமனுமாயிருந்த நோவா மூலம் புது உலகை படைக்கவும் தேவன் தீர்மானித்தார்.

**ஆதியாகம முற்பிதாக்களின் ஆயுள் நீட்சி**





**8-ம் பக்க தொடர்ச்சி**
←←←

3. இரு தூதர்கள் மாலை மயங்கும் நேரத்தில் சேர்ந்த இடம். நீதிமான் லோத்து வசித்த இடம். (3)
5. சம பூமி பல உண்டு. மூன்று புருஷர் முதல் முற்பிதாவுக்கு தரிசனமான இடம். (3)
15. அசைந்து அசைந்து எழும்பிய பேழை நிலை கொண்டது எங்கே? (6)
16. நான்கு ராஜாக்கள் ஒருபுறம், ஐந்து ராஜாக்கள் மறுபுறம் என போர் புரிந்த இடம்; இங்கு நீலக்கீல் கிணறுகளும் உண்டு. (11) கடைசி இரு எழுத்துக்கள். ↱



# I. READ AND RECOGNISE : 32




Read and Recognise, வேதாகமப் புதிர், வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில் அனைவரும் பங்கு பெறலாம். **25.10.2019**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும். குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்லி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192** என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக எழுதி Whatsapp மூலம் பதிலை அனுப்பலாம்.

## Guidelines :

a. Bible Portion : Luke 11 & 12 Chapters
b. All answers begin with the letter “F”
c. Letters can be used any number of times.
d. Give the reference.

**Questions :**

1. I ............... not, litte ..............., ................ it is your .................. good pleasure to give you the kingdom.
2. ......................, hallowed be your name.
3. O you of little ...................
4. ......................, lend me three loaves.
5. Are not ................ sparrows sold for two pennies?
6. A divided household ....................
7. Not one of the sparrows is ................. before God.
8. What ................. among you, if his son asks ................... a ......... will instead of a .............. give him serpent.
9. Be like men who are waiting .............. their master to come home from the wedding .....................
10. The last state of that person is worst than the .......................

**Answers : I. Read and Recognise : 31** (Luke 9 & 10)

| | | |
|---|---|---|
| **1. down 10:30** | **5. dead, dead 9:60** | **8. depart 9:4** |
| **2. disciples 9:40** | **6. distracted 10:40** | **9. drew 9:51** |
| **3. drinking, deserves 10:7** | **7. dazzling 9:29** | **10. delivered 9:44** |
| **4. denarii 10:35** | | |

பரிசு பெறுபவர்கள் :

1. திருமதி. **வித்தியா வில்சன்** லால்குடி, 2. திருமதி. **ரூபி அகஸ்டின்** சென்னை, 3. திருமதி. **குளோரி** தஞ்சை